# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/04 - 2023 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2023.08.14

*2345/04 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/AC/8/5/22.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 4-3/7/2019/HW/627.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 582பீ, பெலென்வத்தை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பெலென்வத்தை (கெஸ்பேவ நகர சபை) கிராமத்தில் அமைந்துள்ள கொழும்பு மாவட்ட நில அளவையாளர் அதிபதி சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் 2022.08.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ 9976 இன் துண்டு இல. 1 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0067 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டு விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படு கின்றது :

*01.* **துண்டு இல. 1**

காணியின் பெயர் : தெல்கஹகனத்த, வரி மதிப்பீட்டு இல. 29/2, மத்தேகொட வீதி; விபரம் : வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடங்கள் இரண்டின் பகுதி உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஜனக் பிரியந்த கமகே, மத்தேகொட, (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம் : 0.0067 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே.பீ. பேமதாச,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2023, ஓகத்து 09.

EOG 08 - 0131

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KWDS/LND/01/ACQ/03/2014.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/ 4/ 2014/ LO/230.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1988/38 ஆம் இலக்க, 2016.10.14 ஆந் திகதியுடைய அதி விசேட வர்த்தமானியில் 1A ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் திகதியானது 2016.11.30 எனவும் நேரம் மு.ப. 10.00 மணி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது 2023.10.23 ஆந் திகதி எனவும் நேரம் மு.ப. 10.00 மணி எனவும் திருத்தப்படுதல் வேண்டும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

சஞ்ஜீவனீ கன்டம்பி,
பிரதேச செயலாளர்,
கலவான.

பிரதேச செயலகம்,
கலவான,
2023, ஓகத்து 08.

EOG 08 - 0132